ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ரு. விபவவருஷ மார்கழிமீ பகுதி ௧௨.

Vol 5. *December & January 1928-29.* No. 12.

அந்தர்யாமீ.

[வித்யா ரத்னகர பண்டிதவர ஸ்ரீ. உ. வே.
வி. ஆர். நரஸிம்ஹாசார்யஸ்வாமி எழுதியது]

அருட்கடலாகிய அனந்தன் இப்பிரபஞ்சத்தின்கண்ணுள்ள பல்லுயிர்கட்கும் உயிரளிப்பானாய்த் தன் திருவுளமுகந்து ஏற்றுக்கொண்ட திருவுருவங்கள் பலவற்றுள் 'அந்தர்யாமீ' என்கிற இது முக்கியமானதோர் ஸ்வரூபம் என்னலாம்.

இதை, திவ்யாத்மஸ்வரூபமென்றும், தஹரஸ்வரூபம் என்றும் சாஸ்திரங்கள் இருவகையாகப்பிரித்துக் கூறுகின்றன. இந்தத் திவ்யாத்ம ஸ்வரூபமேதான் சேதனம் அசேதனம் என்று இருவகைப்பட்ட பிரபஞ்சத்தில் உள்ளடங்கிய வஸ்துக்களை எல்லாம் தனக்கு உடலாய்க்கொண்டு அவற்றிற்கெல்லாம் தான் உயிராக விளங்குகின்றதாம். இதைப்பற்றியேதான் பரமாத்மாவை ஸர்வப் பிரபஞ்சசரீரி என்று அறிஞர்கள் விவரிக்கின்றனராம். அந்த:-உள்ளே புகுந்து, யாமீ-நியமித்துக்கொண்டு இருக்கிறது என்கிற பொருளையிட்டே இத்திவ்யாத்மஸ்வரூபத்தைச் சாஸ்திரங்கள் முக்கியமாய் அந்தர்யாமீ எனக் கூறுகின்றனவாம். இது இப்படியிருக்க, தார்க்கிகர் முதலாய சிற்சில மதவாதிகள் இக்கூற்றை ஒப்புக்கொள்ளுகிறார்களில்லை. அவர்கள் பகவானுக்குப் பிரபஞ்சமெல்லாம் சரீரமென்றும் இவற்றிற்கெல்லாம் அவன் ஒப்பற்ற ஒரே ஆத்மாவென்

றும் ச்ரோத்ரியர்கள் சொல்லுவதை அடியோடு மறுக்கின்றனர். அதற்கவர்கள் பின் வருமாறு அனேக யுக்திகளையும் காட்டுகின்றனர். ஈசனுக்குச் சரீர மொன்றேனு மிருப்பதற்கும் சற்றுமிடமேயில்லை. அப்படியிருக்க அவனுக்கு இப்பிரபஞ்சப் பொருள்களை யெல்லாம் ஒன்றையும் விடாமல் உடலேயென்பது மிக்க சாஹஸமேயாகும். ஒரு சேதனன் சரீரத்தைப் பெறுவதற்கு அவன் செய்த புண்ணிய பாபங்களெனப்படுகிற கர்மாவேதான் காரணமாகுமென்று சாஸ்திரங்கள் ஸந்தேஹமறக் கூறுகின்றன. இதற்கு "தத்ய, இஹ, ரமணீய, சரணுஹ அப்யாசோ ஹயத்தே ரமணீயாம் யோனி மாபத்யேரந்" "பிராஹ்மண யோனிம்வா, க்ஷத்ரியயோனிம்வா, வைசிய யோனிம்வா, அதய இஹக பூயசரணுக யத்தேக பூயாம் யோனி மாபத்யேரன் ச்வயோனிம்வா ஸூகரயோனிம்வா சண்டாள யோனிம்வா" இத்யாதி உபனிடதங்கள் ப்ரமாணமாய் விளங்குகின்றன. இவற்ருல் சரீரத்தைப் பெறுவதற்குக் கர்மாவே முக்கிய காரணமென்று வெள்ளிடைமலைபோல் வெளிப்படுகின்றதே! இனி, "அபஹதபாப்மா நஸுக்ருத துஷ்க்ருதே" இத்யாதிப் பிரமாணங்களினுல் புண்யமோ அல்லது பாபமோ எவ்விதக் கர்மாவும் அணுவளவும் அணுகமுடியாத அற்புதஸ்வரூபனென்று கொண்டாடப்படுகின்ற பரமாத்மாவுக்குச் சரீரங்களுமுண்டென்று வர்ணிப்பது மலடியின் மக்களுக்கு மாலை சூட்டுவது போலக் கேவலம் கேலிக்கேயிடமான பொய்க் கூற்றேயாகும். ஆகவே ஈச்வரனுக்குச் சரீரத்திற்குக் காரணமான கர்மாவே யில்லாததினுல் அதன் கார்யமான சரீரம் மட்டும் எங்கிருந்து வருமோ?

மேலும் எவராயினும் ஸரி, சரீரத்தைப் பெறுவதெல்லாம் ஊழ்வினைப்பயனுன ஸுகதுக்கங்களை அனுபவிப்பதற்கேதானென்று "புண்ய: புண்யேந கர்மணுபவதி. பாப: பாபேந, சாது கர்ரி சாதுஜிவதி" "அதப்பாபகாரீபாபீயான் பவதி" என்பது முதலான பிரமாணங்கள் தெரிவிக்கின்றனவே. அப்படியிருக்க அனுபவத்திற்குக் காரணமான கர்மாவே யில்லாததினுல் அதன் பயனுன ஸுகதுக்கம் ஏதுவு மில்லாமல் நிர்மலஸ்வரூபனுய் விளங்குகின்ற பரமாத்மாவிற்குப் போகத்திற்கென்றே ஆகியதால் 'போகாயதன' மென்று பெயர் பெற்றிருக்கும் சரீரமுண்டென்பதற்குப் பிரஸக்தி

எங்கே? எனவே சரீரலாபத்திற்குப் பலமான ஸுகதுக்கானுபவத்தின் சிந்தனைக்கே இடமாயில்லாத ஈசுவரனுக்குச் சரீர முண்டென்பது பயனுள்ளதாகுமோ? மேலும் ஈசுவரனுக்குச் சரீர முண்டென்பதில் பயனில்லை என்பது மட்டுமில்லை. சரீரத்தை ஒப்புக்கொள்வதில் வெகுவான விரோதங்களும் ஸம்பவிக்கின்றமையால் சரீரமேயில்லை யென்று கூடச் சாதிக்கவேண்டும். எப்படியெனில், சரீரமுண்டென்றேமானால் அதையுள்ளவர்களை விட்டு விலகாதவைகளான பிரியாப் பிரியரூபங்களான இன்பம் துன்பங்களும் ஈசுவரனுக்கு முண்டென்றேதான் ஒப்புக்கொள்ள வேண்டிவரும். ஜெயிலில் அடைபட்டுக்கைதியாயும் கிடக்கின்றவனுக்கு துக்கமென்பது ஒன்றுமேயில்லை யென்பது கூடாக் கூற்றன்றோ? இவ்வுண்மையையே "நஹவைஸசரீரஸ்யஸத:" "பிரியாப் பிரியயோரபஹதிரஸ்தி" "அசரீரம்வா வஸந்தம் பிரியாப் பிரியேஸ் பிருசத:" சரீரத்தைப் பெற்றிருப்பவனுக்கு அதன் வாயிலாக வரும் பிரியாப் பிரியங்களை விட்டு ஒருபோதும் விலகியிருக்கமுடியாது. சரீரமேயில்லாதவரையே யன்றோ அவைகள் அணுகமாட்டாமல் விலகியோடும் என்கிற உபநிஷத்தும் உறுதி கூறுகின்றது. இப்படி இருக்க ஈசுவரனுக்குச் சரீர முண்டென்பது எப்படி? சரீரமேதேனுமொன்றை மட்டும் பெற்றவரே அதன் இன்ப துன்பங்களால் அலைக்கப்பெற்றுத் தடுமாறுகின்றனரென்றால் இவ்வுலகத்திலுள்ள பொருள்களை யெல்லாம் உடலாய்ப் பெற்ற ஒருவனது துர்த்தசையை வர்ணிக்கவுமாகுமோ ?

மேலும் லக்ஷணத்தைக்கொண்டே லக்ஷ்யங்களை அறிய வேண்டுமென்பது சாஸ்திரீயமான ஒருமுறை. உதாரணமாக சீதம் உஷ்ணம் (குளிர்ச்சி, சூடு) முதலான குறிப்புகளைக்கொண்டுதான் பனிக்கட்டி சூரியவெப்பம் இவைகளை ஜலம் தேஜஸ் எனப்படும் லக்ஷ்யத்தின் இனத்தைச் சேர்ந்தவைகளென்று உணர்கின்றோம். அதுபோல் இப்பிரபஞ்சத்தை ஈசுவரனுக்குச் சரீரம் என்று கொள்ள வேண்டுமானால் பொதுவாகச் சரீரத்திற்கென்று சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்ற லக்ஷணங்கள் இதனிற் பொருந்தவேண்டும். பிரபஞ்சத்திலோ அந்தலக்ஷணங்களுள் ஒன்றேனும் பொருந்து

கிறதேயில்லே. சக்ஷுராதிகளான இந்திரியங்களுக்கு ஆச்ரயமாயிருப்பது (கண் காது முதலிய கருவிகள் அமைக்கப் பெற்றிருப்பது) போகாயதனமாயிருப்பது (ஸுகதுக்கங்களை நுகருவதற்கு இடமாயிருப்பது) இவைபோன்றவைகள் சாஸ்திரங்களில் சரீரத்திற்கு லக்ஷணமாகக் கூறப்பட்டிருக்கின்றன. சேதன சேதனமயமான இப்பிரபஞ்சத்தில் அந்தலக்ஷணமொன்றும்காணலாம் படியில்லேயே? அதனுள் அதிஸூக்ஷ்மமான சேதனஅம்சத்தில் இந்திரியவமைப்பு முதலிய வற்றிற்கு இடமேயில்லே யாதலால் அவற்றை ஈசுவர சரீரமென்று சொல்வதற்கில்லே. அசேதன பாகத்திற்ருனுகட்டும் கண்ணுங் காது மெதுவுமேயில்லாத ஈசுவரனின் கண்ணுங் காதும் வைத்துக் கட்டப்பட்டிருக்கின்றதென்பது தான் எப்படி ஸங்கதமாகும்?

இனி, இப்பிரபஞ்சத்திலுள்ள எந்தப் பொருளேயேனும் ஈசனுக்கு சரீரம் என்பதற்குரிய லக்ஷணம் ஒன்றையும் ஆங்குக் காண்பது கூடாததாயிருக்க ஸர்வபிரபஞ்சமும் அவனுக்குச் சரீரமே யென்று சாதிக்கப் பார்ப்பது ஸாஹஸமே யன்றோ? இவையெல்லாம் ஒருபுறமிருக்க "அசக்ஷு: சரோத்ரம்ததபாணி பாதம், அசரீரம் சரீரேஷு" என்பது முதலான வேதாந்த வாக்கியங்களே ஈசுவரனுக்குக் கண் காது முதலான கருவிகளோ அவையமைக்கப் பெற்ற சரீரமோ எதுவுமே கிடையாது என்று ஐயம்திரிபறப் பறை சாற்றுகின்றனவே. அதனை யனுதரித்து அதற்கு முரணுகப் பிதற்றுவதெல்லாம் கேவலம் நாஸ்திகவாதமே யாகுமன்றே! ஆகவே சரீரத்திற்குக் காரணமான கர்மாவே யில்லாமை யொன்று, சரீரத்தின் பிரயோஜனமான போகத்தில் அபேக்ஷையில்லாமை யொன்று, சரீரத்தை ஒப்புக்கொள்வதில் வெகு விதமாக ஈசத்தன்மைக்குக் கேடு விளேவதொன்று, சரீரமெனப்படும் பிரபஞ்சத்தில் சரீரத்தின் லக்ஷணமொன்றும் சேராமையொன்று, முடிவில் ஈசனுக்குச் சரீரமேயில்லேயென்று சொல்லுகிற மறைமுடி வசனங்களோடு முரண்படுகை யொன்று ஆக இவ்வைந்தும் ஒன்றென்றே பரமாத்மாவுக்குச் சரீரமேயில்லேயென்று சாதிப்பதற்குப் போதுமான காரணமாயிருக்க ஐந்துங்கூடி எதிர்க்கையில் கேட்கவும் வேண்டுமோ?

ஆனல் "யஸ்யபிருதிவீ சரீரம்" எவனுக்குப் பிருதிவீ யெனப் படும் இப்பூமி சரீரமோ, "யஸ்யாப: சரீரம்" எவனுக்கு அப்பு எனப்படும் ஜலம் சரீரமோ, "யஸ்யாத்மா சரீரம்" "யஸ்ய விக்ஞா நம் சரீரம்" எவனுக்கு விக்ஞான மெனப்படுகிற ஜீவராசிகள் சரீரமோ, "ஏஷத ஆத்மா அந்தர்யாமீ" இந்த ஸர்வாந்தர்யாமியே உனக்கும் ஆத்மாவாயிருக்கிறான் காண்; என்பது போன்ற உப நிஷத்துக்கள் பிரபஞ்சங்களை யெல்லாம் தொகுத்தும் தனித்தும் எடுத்துப் பரமாத்மாவுக்குச் சரீரமென்றும், அவற்றிற்கெல்லாம் அவனே அந்தராத்மாவென்றும் கூறுகின்றனவே. இனி அவற்றின் கதியென்ன? என்றதொரு சங்கை உண்டாகும். அதற்கு இப்படி சமாதானம் அறிந்துகொள்ளவேண்டும். அவ்வரசன் அவனது இராஜ்யத்திற்கு உயிர்; அவ்விராஜ்யம் அவனது உடல் என்பது போன்ற உபசார வார்த்தைகளேயாம். அங்கு ஆளுபவனுக்கும் ஆளப்படுமவைகட்குமுள்ள அன்னியோன்னியபாவத்தினலேயே யன்றோ அவ்வியவஹாரமுண்டாயது. அதுபோல இங்கும் ஈச ஈசிதவ்யங்களுக்குள்ள சம்பந்தத்தை முன்னிட்டேதான் இவ்வித உபசாரச் சொற்கள் வழங்கப்படலாயின. ஆதலால் இதுகொண்டு இல்லாததொன்றையும் சாதிக்கமாளாது என்று சிற்சில நியாயவாதிகள் பிரபஞ்ச ஈச்வரர்களுக்குள்ள சரீர சரீரிபாவத்தை மறுக்கின்றனர்.

அம்மறுப்புக்கு வேதாந்திகள் சொல்லும் மறுமொழியை இனிக்கவனிப்போம். முதலாவது கர்மா என்கிற காரணமில்லாத தால் ஈசுவரனுக்குச் சரீரமுண்டாவதற்கு இடமில்லை எனப்பட்டது. அது தவறு. சரீரத்தைப்பெறுவதற்குக் கர்மாகாரணமெனப்பட்டா லும் அது சரீரமெல்லாவற்றிற்குமே காரணமாகாது. கர்ம சரீரம் மட்டிற்குமே அதைக்காரணமென்னல்வேண்டும். கர்மலேசமுமற்ற கடவுளுக்கோவெனில் அவன் திருவுளமேதான் அவனேற்கும் திருவுருவங்களுக்குக்காரணமாகிறது. ஆகவே அவன் தனது இச் சைப்படியே சரீரமெடுக்கிறனாதலின் அத்திவ்வியமங்களவிக்ரஹத் திற்குக் கர்மாவின் உதவி வேண்டாமென்பது பெறப்படும். கர்மாவில் லாததால் அவனுக்குக் காயமுமில்லையென்பது அறியாமையே. இரண்டாவதாக ஈசனுக்குச்சரீரமெடுப்பதிற் பயனென்றுமில்லையாத லால் அவனுக்குச் சரீரத்தைப்பற்றிய அபேக்ஷையே யில்லையெனப்

பட்டது. அவன் திருவுருக்கொள்வதின் பிரயோஜனங்களுக்கு அளவொன்றே யில்லையாதலால் அக்கூற்றும் அர்த்த மற்றதேயாம். மிக்க விரிவான இந்த விஷயத்தை இறுதியில் விவரித்துக்கூறி இவ்வியாஸத்தை முடிக்கப்போகின்றே மாதலால் இப்போததனை விடுத்து மேலே செல்லுவோம்.

மூன்றுவதாக பகவானுக்குச் சரீரமுண்டென்று விட்டால் அவனது ஐசுவரியத்திற்கே குந்தகம் விளைவித்ததாகும் எனப்பட்டது. அதுவும் ஆலோசியாமற் சொல்லியதேயாம். இன்பதுன்பங்களை யனுபவிப்பதற்குப் பூர்வகர்மமெனும் ஊழ்வினை யொன்றே நேரிற் காரணமேயன்றி சரீரமென்பது அதற்கொரு வாயில் மட்டுமேதான். கர்மமில்லாதார்க்குச் சரீரத்திலிருக்கையிலும் ஸுகதுக்கங்கள் கிடையாதுதான். ஆனல் இவ்வுண்மையை மறுக்க ஒரு உதாஹரணம் காட்டப்பட்டது. ஜெயிலிலுமடைபட்டுக் கிடக்கின்றான்; ஆனலும் துயரமென்பது சிறிதுமில்லை யென்பதுபோலச் சரீரத்துள்ளும் நுழைந்தான்; வினைப்பயனென்றும் அவனை வருத்தவில்லை யென்பது வீண் வார்த்தையே என்ற இதுவும் உற்றுப்பாராத குற்றமேதான். கைதி துன்பப்படுவது கேவலம் காராகிருஹத்திற் புகுந்ததினாலேதானா? அப்படிக்கானல் அதனுள் அனுதினமும் அநேக முறை புகுந்து புறப்படும் அச்செயிலின் அதிகாரியை அக்காராப்பிரவேசம் ஏன் சற்றும் பாதிக்கவேயில்லை? அவர் குற்றமொன்றைச்செய்து கட்டாயமாய் ஜெயிலில் அடைக்கப்பட்டாரோ? இல்லையே; அவர் ஸ்வேச்சையினலன்றோ ஆங்குள்ள கைதிகளைக் கண்காணிப்பதற்குத் தாமாகவே வலுவில் சென்றார். கைதிகளுக்குள்ள கஷ்ட நிஷ்டூரங்கள் அவரை யெப்படிக் கண்ணெடுத்துப்பார்க்கமுடியும்? அவரைக்கண்ட வுடனேயே எல்லாத்துன்பங்களும் விலகியோடிவிடாதா? அப்படி யிருக்கும்போது அவருக்குக் குறையென்னவிருக்கிறது? என்றாலோ உண்மைதான். அவர் கைதிகளைக் காக்கும் கடமை யெனும் குணம் கொண்டே ஜெயிலிற் புகுந்தாராதலின் அவரது காலடிபட்ட வுடனேயே ஆங்குள்ள துயரங்களெல்லாம் தூரவிலகிவிடுகின்றன. அதுபோல் இங்கும் கர்மவசத்தினலன்றிக் கர்மிகளைக் காப்பாற்றுங் கடமையையே மேற்கொண்டு கடவுள் உடம்பெடுக்கின்றாராதலால் இதனுள்ளடைபட்

டோருக்குள்ள இன்ப துன்பமெதுவும் அவரைச்சிறிதும் அணுகாதுதான். ஆகவே ஐசுவரியத்திற்குப் பங்கம் வருமென்ற பயத்தினாலும் ஈசுவரனுக்குச் சரீரம் கிடையாதென்று சொல்வதற்கும் அவசியமே யில்லை.

இதுநிற்க, லக்ஷணம் பொருந்தவில்லை யாதலால் எப்பொருளையும் ஈசுவரனுக்குச் சரீரமாகக்கொள்ளக் கூடாதென்று மற்றொரு காரணம் கூறப்பட்டது. இதுகேட்ட வுடனே நமக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. அஃதென்னவெனில், ஒரு கிராமத்தில் ஒரு பிரபு இருக்கிறார். அவருக்கு விசாலமான பூமிகள் சொந்தமாயுண்டு. அதோடு மிக்க தனவான். அவர் கார்யவசத்தால் ஒருஸமயம் பட்டணம் சென்றிருந்தார். அங்கே தற்செயலாய் ஒரு சீமைப் பசுவைப் பார்த்தார். உடனே அவருக்கு அம்மாதிரிப் பசு வொன்றைத் தாமும் வாங்கவேண்டு மென்கிற ஆசையுண்டாயிற்று. விசாரித்ததில் இந்தியாவில் கிடைக்கக்கூடிய பசு அவ்வளவு சுத்தமாயிராது; இருபிறவியாகத்தானிருக்கும்; நேரில் சீமையிலிருந்தே வருவித்தால் சிலாக்கியமாயிருக்குமென்று தெரிந்தது.

இங்கிலாந்தில் பசுவிற்குப் பெயர்போன இயார்க்குஷெயர் என்னுமிடத்திற்கு எழுதி வெகு சுத்தமான சீமைப்பசுவொன்றை உடனே வரவழைத்தார். கிரயமும் பிரயாணச் செலவுமாக அதற்கு அநேகமாயிரம் ரூபாய்கள் சென்றன. அதுநிற்க, அப்பசுவுக்கு வெயில்காற்று இவைகளின் வஸதியுள்ள வகையால் கட்டிய கொட்டடிலே விரிப்புக்கம்பளமுள்பட சற்றேறக்குறைய ஓராயிர ரூபாய்கள் ஆய்விட்டனவாம். பசுவந்து சேர்ந்தவுடன் அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் அனைவரும்வந்து பார்த்து விந்தை! விந்தை!! என்று வாயாரப் புகழ்ந்து சென்றனர். அவர்களுள் அந்தக் கிரஹஸ்தருக்கு ஸ்நேகிதரான பண்டிதரொருவர் அவர் அப்பசுவைப் பார்த்துவிட்டு ஆச்சரியத்தையோ சந்தோஷத்தையோ அடையாமல் சற்று மனஸ்தாபமுள்ளவர்போல மௌனமாயிருந்தார். அதைக்கவனித்த அந்தப்பிரபு பண்டிதரண்டையில்வந்து தோழனே! கோவைப் பார்த்தீரா? உம்மனத்திற்கு இது பிடித்திருக்கிறதா? என்று வினவினர். அதற்கவர் இந்தப்பிராணி என்னமோ நன்றாகத்தானிருக்

கிறது; அழகில் பழுதுசொல்வதற்கில்லை; ஆனால் இது பசுவல்ல; என்று வெகு அழுத்தமாய் விடைகொடுத்தார். அதன்மேல் அந்தப் பிரபு பரபரப்புடன் ஏனய்யா! அப்படிச்சொல்லுகிறீர்கள்; என்னும் போதே லக்ஷணம் பொருந்தவில்லையே? நான் வேறென்னசொல்லு வது என்றார். ஏன் ஏதாவது சுழிகிழி சுத்தமாயில்லையோ? தரகன் கருப்பத்தேவன் கூட எல்லாம் சுத்தமாயிருக்கிறதென்றானே என்று கவலையுடன் கேட்டார் பிரபு. அதற்குப் பண்டிதர் ஸரிதான்; ஸாமுத்திரிகம் ஸரியாயிருக்கலாம்; தர்க்கரீதியில் ஏற்படுத்திய சாஸ்திரீய லக்ஷணமில்லை என்றல்லவோ நான் சொல்லுவது. அதை அந்த முட்டாள்பயல் எங்கே கண்டான்பாவம். என்னும்போதே பிரபுமுன்னிலும் மனங்கலங்கி ஏன மங்களக்குறைவான அவ லக்ஷணங்கள் ஏதேனும் சாஸ்திரோக்தமானது இதனிடம் காணப்படுகிறதோ? இந்தப்பசுவினிடத்திலுமா லக்ஷணப்பழுதிருக் கிறது? என்னும்போதே அவர் பேச்சைத்தடுத்துப் பண்டிதர் சொல்லுகிறார்.— ஐய! சாஸ்திரக்ஞர்களான நாங்கள் கோவுக்கு ஸாஸ்னையும் சிருங்கமும் சேர்ந்து லக்ஷணமாகுமென்று தீர்மானித் திருக்கிறோம்; கொம்பொன்றைமட்டும் கோ லக்ஷணமென்றால் அதுமஹிஷம் அஜம்முதலானவற்றில் அதிவ்யாப்தமாகும். அதனை நீக்கவேண்டி ஸாஸ்னையையும் சேர்க்கவேண்டியது அவசியமே யாயிற்று. ஸாஸ்னையென்றால் கழுத்தின் கீழ்ப்புறத்தில் தொங்கு கின்ற ஓர்விதச்சதையன்றோ! அது எருமைக்கோ ஆட்டிற்கோ எதற்கும் கிடையாதன்றோ! ஆகவே அதிவியாப்திபறந்துவிடுகிறது. இப்பிராணிககு ஸாஸ்னையில்லாததினால் இதனையெப்படிப் பசு வென்றுகொள்வது? அன்றி இச்செந்துவின் சோபைக்காகவோ அல்லது தாங்கள் தாக்ஷிண்யத்திற்காகவோ இதையும் பசுவென்றே ஒப்புக்கொள்ளுவதென்றால் குறித்த கோலக்ஷணத்திற்கு அனி யாயமாய் அவ்யாப்தியல்லவோ வந்துவிடும்; அக்குறைக்குத் தீர ரான தார்க்கிகர் இடம்தருவரோ? இப்பஞ்சைப் பிராணிதான் பாவம்தான் பசுவல்லவென்று ஒதுங்கிக்கொள்ளவேண்டும்; என்று அனுதாபத்துடன் உருக்கமாய்ச் சொன்னாராம். அதுகேட்டு அங் குள்ளோரனைவரும் வயிறுகுலுங்கச் சிரித்தனராம். இக்கூற்று எப்படியிருக்கின்றது பாருங்கள்! இதுபொதுவாக மனித ஸ்வபா

வத்திற்கு மிகைப்படுத்துக்கூறும் அதிசயோக்திபோலத் தோற்றினாலும் பண்டிதர்கள் அதிலும் தார்க்கிகர்திறத்தில் பரிமிதமான ஸ்வபாவோக்தியேதான். வஸ்துக்களுக்கு லக்ஷணத்தைச் சொல்லத் தலைப்பட்டவர்கள் லக்ஷியங்கள் எல்லாவற்றையும் கூடியவரையில் அலசிப்பார்த்து அவற்றிற்கெல்லாம் பொருந்தும் வகையில் அதனைக்குறிக்க வேண்டுமேயன்றி அக்கம் பக்கத்தை ஆய்ந்து பாராமல் தம்மெதிரே நின்ற சிற்சில லக்ஷியங்களைமட்டும் பார்த்து விட்டு அவற்றில் மட்டும் சேரும்படியானதொரு அவலக்ஷணத்தை அரை குறையாகக் கூறிவிட்டு அதுகொண்டே லக்ஷ்ய ஜாதியங்களான அனேக விடங்களில் 'நீர்கூறிய லக்ஷணத்தைக் காண்கிலமே' யென்றால் உடனே லக்ஷணத்தை ஒழுங்காகத் திருத்திக்கொள்ளாமல் 'அஃதென்னமோ நாம் லக்ஷணத்தை நிர்ணயித்துவிட்டோம்; அஃதொருபொழுதும் பிறழாது; அத்தகைய லக்ஷணம் எங்காகிலுமில்லாமலிருந்தால் அப்பொருள் லக்ஷ்யகோடியைவிட்டுத்தன்னை விலக்கிக் கொள்ளத்தான்வேண்டும்' என்று பிடிவாதம் பிடிப்பது தார்க்கிகர்களுக்கு இயல்பேயாம்.

தொடரும்.

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

3-வது அதிகாரம்.

(196-ம் பக்கத்தொடர்ச்சி)

கிருஷ்ணபகவான் சரித்திரத்தைப் பற்றிச் சொல்லப்புகுகின்ற க்ரந்தங்களுக்குள் மஹாபாரதமே முதன்மைபெற்றிருக்கிறதென்று முன்பே சொல்லியிருக்கிறோம். மஹாபாரதத்தை இதிஹாஸமென்று சொல்லுகிறோம். இதிஹாஸமென்றால் சரித்திரத்தைப் பற்றிச் சொல்லுதல். இதிஹாஸமென்று எதைச்சொல்ல முடியும்? தற்காலத்தில் நாய் நரி முதலியவைகளைப்பற்றி ஒரு பொய்க்கதை

எழுதி அதற்கு இதிஹாஸமென்று பெயர் அளிக்கிறார்கள். ஆனால் எந்தக் கிரந்தத்திலிருந்து "வ்ருத்தம்" "புராவிருத்தம்" பூர்வத்தில் எவை உண்மையாய் நடைபெற்றனவோ அவைகளையுள்ளபடி தெரியமுடியுமோ அந்தக்கிரந்தமே இதிஹாஸமெனப்படும். அதைத்தவிர மற்றக்கிரந்தங்களை இதிஹாஸமெனக்கூறுதல் இயலாது. "தர்மார்த்த காமமோக்ஷாணாம் உபதேசஸமந்விதம், பூர்வவ்ருத்த கதாயுக்தம் இதிஹாஸம் ப்ரசக்ஷதே" "தர்மார்த்த காமமோக்ஷாணம் உபதேசஸமநாதம் பூர்வவ்ருத்த கதாயுக்தம் இதிஹாசம் ப்ரசக்ஷதே" இதனது பொருள்:— தர்மார்த்த காமமோக்ஷங்களைக்குறித்த உபதேசங்கள் நிரம்பியதாயும் முன்னிகழ்ந்த கதைகளை வெளியிடுவதாயுமுள்ள க்ரந்தத்தையே இதிஹாஸமெனப் பெரியோர் சொல்லுகிறார்கள்.

இப்பாரததேசத்தில் பழமையான க்ரந்தங்களுக்குள் மஹாபாரதம் ராமாயணம் இவையிரண்டுமே இதிஹாஸமெனப் பெயர் பெற்றன. மற்ற க்ரந்தங்களுக்கு இந்தப்பெயர் கிடையாது. ஆராய்ந்து பார்க்குங்கால் இவைகளிரண்டிலுமே விசேஷமாய் இதிஹாஸத்தன்மை காணப்படுகிறது. மஹாபாரதத்தில் சிலகதைகளிருக்கின்றன. அவைகள் உண்மையற்றனவாயும் அஸம்பவமாயுமிருக்கின்றனவென்று அவைகளைத்தள்ளிவிடக்கூடும். ஆனால் இவ்வித தோஷமொன்றும் காணப்படாத பாகங்களை இதிஹாஸமில்லையென்று நாம் எவ்விதம் தள்ளுவது? இவ்வுலகில் எத்தேயத்து பிராசீன இதிஹாஸங்களிலும் உண்மையும் பொய்யுங் கலந்தேயிருக்கின்றன. மஹாபாரதத்தில் உண்மையற்ற சில கதைகள் அதிகமாகப் புகுந்ததற்கு விசேஷகாரணங்களுள. மற்ற தேசங்களில் இயற்றப்பெற்ற இதிஹாஸக் கிரந்தங்கள் எழுதப்பட்டே பிரசாரம் செய்யப்பட்டன. புராதன வெழுத்தாளர் மூலக்கிரந்தத்துடன் ஒத்துப் பார்த்துப் பிழைகளைத் திருத்திக்கொண்டார்கள். இத்தேயத்துப் பிராசீன க்ரந்தங்களெல்லாம் இயற்றப்பட்டு வாய்ப்பாடமூலமாகவே பிரசாரம் செய்யப்பட்டன.

எழுத்துகள் வழக்கத்திற்கு வந்துங்கூட பிராசீன க்ரந்தங்கள் முந்தியவழக்கத்தையநுசரித்து குருசிஷ்ய பரம்பரையாக வாய்

மொழியாகவே ப்ரசாரம் செய்யப்பட்டுவந்தன. ஆதலால் ப்ரக்ஷிப்தங்கள் (இடைச்செருகல்கள்) க்ரந்தமத்தியில் புகுவதற்கு அவகாசம் ஏற்பட்டது. இரண்டாவது காரணம் ரோம், கிரீஸ், முதலான தேசங்களிலுள்ள இதிகாசக்கிரந்தங்கள் மஹாபாரதம்போல் ஜனசமாஜத்தில் ஆதரவு பெறவில்லை. ஆகையினால் இத்தேசத்தின் எழுத்தாளர்களுக்கு ப்ரக்ஷிப்தங்களை க்ரந்தங்களின் நடுவில் நுழைப்பதற்கு எவ்விதம் ஆசையோ அவ்விதம் மற்றைய தேசத்தின் எழுத்தாளர்களுக்கு ஏற்படக்காரணமில்லை. மூன்றாவது காரணம் மற்ற தேசத்தின் க்ரந்தகர்த்தாக்கள் தங்களுடைய புகழையோ மற்றெவ்விதப் பிரயோஜனங்களையோ கருதி நூல்களையியற்றினர். தங்களுடைய கிரந்தங்களைத்தங்கள் பெயரைக் கொண்டே பிரசாரம் செய்வதில் அவர்களுக்கு மிகவும் விருப்பமிருந்தது. தாம் இயற்றியவைகளைப் புகவிட்டுத் தம் பெயர் வெளியிடாமலிருப்பதில் அவர்களுக்கு எண்ணமிருக்கமுடியாது. இத்தேசத்திலோ பிராமணர்கள் சுயநலம் கருதாமல் நிஷ்காமமாய் நூல்களை இயற்றினார்கள். லோகஹிதத்தைத்தவிரத் தங்களுடைய புகழைப்பெருக்குவதற்கு ஆசையவர்களுக்கில்லை. சிற்சில நூல்களில் அதை ஆக்கியோரின் பெயரே புலப்படவில்லை. அநேக உயர்ந்த க்ரந்தங்களில் அவைகளை இயற்றியவர்கள் என்னவர்ணத்தைச்சார்ந்தவர்களென்று அறிவதே முடியாமலிருக்கிறது. இத்தேசத்தில் இம்மாதிரி சுயநலம் பாராட்டாத கிரந்தகர்த்தாக்கள் தேச நன்மைக்காகச் சிறந்த நூல்களை நிஷ்காமமாக இயற்றி அவைகளைப் பிரசாரஞ்செய்து உலகநன்மையைப் பெருக்குகிறார்கள். இதனால் மற்ற க்ரந்தகர்த்தாக்களும் தாங்களியற்றியவைகளையும் சிறந்த க்ரந்தங்களில் நுழைத்துவிட்டார்கள்.

இக்காரணங்களால் மஹாபாரதத்தில் ப்ரக்ஷிப்தங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. ப்ரக்ஷிப்தங்கள் அதிகமாகக்காணப்படுவதால் இப்பெரிய இதிஹாஸ கிரந்தத்தில் உண்மையான விஷயங்களே இல்லையென்று சொல்வது பேதமையாகும்.

தொடரும்.

212
R011-118
1251

ஸ்ரீ

நன்கொடை.

நமது திவாகரம் 'நீடூழிகாலம் நிலைபெற்று உலகிற்கு அறப் பெரிய உபகாரத்தைச்செய்துவரவேண்டும்' என்ற கருத்துடையவர்களாய் ஸம்ரக்ஷகராகவும், போஷகராகவும், ஜீவித சந்தாதார்களாகவும் சேர்ந்து வருகிற கிரமத்தில் இப்பொழுதும் கீழ்க்குறிப்பிடப்பெற்ற சிலர் ஜீவித சந்தாதார்களாகச் சேர்ந்துள்ளார்கள். இவர்களது உபகாரம் எழுமையும் மறக்கற்பாலதன்று. இவர்கள் இம்மையில் நீண்டவாழ்நாளையும், சிறந்த ஐசுவர்யத்தையும் பெற்றுப் பெரியார்க்கநுகூலர்களாயிருந்து, பின் ஒப்புயர்வற்ற பரம புருஷார்த்தத்தைப் பெற்று மகிழ்வெய்த எம்பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.

ஜீவித சந்தாதார்கள்.

1.	ஸ்ரீ. உ. வே. S. சேஷய்யங்கார்ஸ்வாமி Avl	(இராமநாதபுரம்)	ரூ. 25
2.	பிர்ம்மஸ்ரீ. வெங்கடகிரி சர்மா	,, (மதுரை.)	,,
3.	ஸ்ரீமான் முத்துக்கிருஷ்ணஞ்செட்டியார்	,, (முத்தியால் பேட்டை சென்னை.)	,,
	,, த. துரைஸாமி முதலியார்	,, (சிந்தாத்ரிப்பேட்டை சென்னை.)	,,
4.	,, P. V. நாதமுனி செட்டியார்	,, (நகை வியாபாரம் சென்னை.)	,,
5.	,, C. நரசிம்மலு முதலியார்	,, (சிந்தாத்ரிப்பேட்டை சென்னை.)	,,
6.	,, P. A. வரதராஜ முதலியார்	,, (கோமளேசுவரன் பேட்டை சென்னை.)	,,
7.	,, தி. ஸ்ரீநிவாஸ முதலியார்	,, (சிந்தாத்ரிப்பேட்டை)	,,
8.	,, R. அப்பாத்துரை முதலியார்	,, திருவல்லிக்கேணி ஷை	,,
9.	,, சடகோபராமாநுஜதாஸர்	,, (பேயாழ்வார்ராமாநுஜ கூடம் ஸ்ரீரங்கம்.)	,,
10.	,, ரா. தில்லைக்கோவிந்த பிள்ளை	,, (ஜவுளிக்கடை சிதம்பரம்.)	,,
11.	,, ஸ்ரீ. உ. வே. எம்பார் ஸ்ரீரங்காசார்யஸ்வாமி	,, (கதாப்பிரசங்கம் சிதம்பரம்.)	,,
12.	,, மு. வெங்கடாஜலக் கவுண்டர்	,, (வாழைக்கும்பு பொள்ளாச்சி தாலூகா)	
13.	,, R. பாலகிருஷ்ணன்	,, (பெரம்பலூர் சென்னை)	,,

பத்திராதிபர்.